வேண்டும். 75 குத்தகைதாரர்களுக்கும் 25 நிலச் சொந்தக்காரர்களுக்கும் அந்த விளைச்சலில்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே அதிலே விளையலே இல்லை என்று சொன்னால், கொடுக்க வேண்டிய தேவை இல்லாமல் இருக்கிறது. இதிலே என்ன சங்கடம் என்று தெரியவில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, 75:25 விளைந்தால்தான் குத்தகை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்குப் பல இடங்களில் தானியத்திற்குப் பதிலாக பணக் குத்தகைக்கு சாகுபடி செய்கிறார்கள். குறிப்பாக தேவஸ்தான நிலங்களில் பணக் குத்தகைக்கு சாகுபடி செய்கிறார்கள். இம்மாதிரி இருப்பதால் அந்த நிலச் சொந்தக்காரர்கள் அவர்கள் மேல் கோர்ட்டிலே போட்டு அதை வசூலிப்பதற்கும், நிலத்தை விட்டு வெளியேற்றவதற்கும் நடவடிக்கை எடுக்கிறார்கள். எனவே பணக்குத்தகை செய்பவர்களுக்காவது விதி விலக்கு அளிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் 1956 ஆம் ஆண்டு வந்தது. 1956 ஆம் ஆண்டு வருகிறபோது கூட, அப்படி எல்லாம் வறட்சி என்று தெரிந்துகூட அந்தச் சட்டத்திலே ஒரு பிரிவு இணைக்கப்பட்டிருக்கிறது. அப்படி எங்காவது ஏற்பட்டால் விளைச்சலே இல்லை என்று சொன்னால் உடனடியாக வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக விதிவிலக்கு பெறுவதற்கு அந்தச் சட்டத்திலே இடம் இருக்கின்றது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வறட்சிக்கு இலக்கான பகுதி என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பகுதி எவை எவை. அவைகளில் விளையாத பகுதிகளில் வரிவஜா செய்வதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி குத்தகையை ரத்து செய்வதைப் பற்றியது.

மேல்நிலைப்பள்ளிகளில் உடற்கல்வி இயக்குநர்களை நியமித்தல்.

*வினா எண் 836—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடற்கல்வி இயக்குநர்கள் இல்லாத எல்லா மேல்நிலைப்பள்ளிகட்கும் உடனடியாக உடற்கல்வி இயக்குநர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ)—உயர்நிலைப் பள்ளியிலுள்ள உடற்பயிற்சி ஆசிரியர் அல்லது உடற்பயிற்சி இயக்குநர்கள் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளுக்கு உடற்கல்வி கற்பிக்க அனுமதிக்கப் பட்டுள்ளனர். மேல்நிலை வகுப்புகளுக்கென உடற்பயிற்சி இயக்குநர்களை நியமிக்க வேண்டி 400 உயர்நிலைப்பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்/உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் மேல்நிலைப்பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பணி யிடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. 1980-81ல், 200 மேல்நிலைப்பள்ளி உடற் பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 400 உடற்பயிற்சி இயக்குநர் பணி இடங்கள் இருந்தும், 200 இடங்களை மட்டும் நிரப்பி இருக்கிறார்கள். மேற்கொண்டு தனியார் துறையிலே இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசுத் துறையிலே இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளிகளிலும் எத்தனை இடங்கள் காலியாக இருக்கின்றன? அவற்றை நிரப்புவதற்கு என் தாமதம்? உடற்பயிற்சிப் பட்டப் படிப்பு படித்த பட்டதாரி ஆசிரியர்கள் இருந்தும், அவர்களை உடற்பயிற்சி ஆசிரியர்களாக நியமிக்க காலதாமதம் என் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளி, உடற்பயிற்சி இயக்குநர் பதவிக்கென நாம் நிர்ணயித்துள்ள தகுதி, பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., பட்டத்துடன் உடற்பயிற்சிக் கல்வியில், முதுநிலைப் பட்டமான எம்.பி.எட். பட்டம் பெற்றிருக்க வேண்டும். அந்தப் பட்டம் பெற்றவர்கள் இதற்குத் தகுதி உடையவர்களாகக் கருதப்பட்டு நியமிக்கப்படுவார்கள்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு யோகாசன பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறதா? இல்லையென்றால், இனிமேலாவது, அப்படிப் பட்ட யோகாசன பயிற்சியையும் மாணவர்களுக்கு அளிக்க அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே அந்த விவரங்கள் இல்லையென்றாலும், இப்பொழுது அமுலாக்கப் பட்டிருக்கிறது; அரசினர் பள்ளிகளில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன்.

[1981 ஏப்ரல் 29

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஊராட்சி ஒன்றியத்தினுடைய பராமரிப்பிலே உள்ள நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஒரு பள்ளி அல்லது இரண்டு பள்ளிகளில் மட்டும் நியமிக்கப்படுகிறார்கள். எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைப் பொறுத்து அவர்களை நாம் நியமித்து வருகிறோம்.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, பி.எஸ்.ஸி., எம்.பி.எட்; பட்டப் படிப்பு படித்திருந்தும் அவர்கள் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கிறது. அந்தப் பதவிகள் எப்பொழுது நிரப்பப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சிலருக்கு அந்த மாதிரி பதவிகள் கொடுக்கப்படவில்லையென்று உறுப்பினர் சொல்கிறார். அரசு ஆணையின்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பதவிகள் கிடைக்கவில்லையென்ற நிலை இருக்குமானால், அவர்கள் அந்த விவரங்களை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பல பள்ளிகளிலே இன்றைக்கு கராத்தே கற்றுக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அது பாட திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் சேர்ப்பதற்கான செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவைகளையெல்லாம் சொல்லித் தருவது நல்லது என்கிற கருத்து அரசுக்கு இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட குழுக்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்.

திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை உடற்கல்வி இயக்குநர்களை நியமிக்க அரசு எண்ணியுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே பதில் சொல்லியாயிற்று.